Cambridge Assessment International Education

# Cambridge International A Level

**TAMIL** **9689/41**

Paper 4 Texts **October/November 2020**

**2 hours 30 minutes**

You must answer on the enclosed answer booklet.

You will need: Answer booklet (enclosed)

**INSTRUCTIONS**
- Answer **three** questions in total in **Tamil**, each on a different text:
  Answer **at least one question** from Section 1.
  Answer **at least one question** from Section 2.
  Answer **one other question** from **either** Section 1 **or** Section 2.
- Follow the instructions on the front cover of the answer booklet. If you need additional answer paper, ask the invigilator for a continuation booklet.
- Dictionaries are **not** allowed.
- You may **not** take set texts into the examination.

**INFORMATION**
- The total mark for this paper is 75.
- Each question is worth 25 marks.

## கட்டளைகள்
- மொத்தம் **மூன்று** கேள்விகளுக்கு, வெவ்வேறு பாடப் பகுதிகளிலிருந்து எடுத்து, **தமிழில்** விடை எழுதவும்:
  முதல் பகுதியிலிருந்து **குறைந்தது ஒரு கேள்விக்கு** விடை எழுதவும்.
  இரண்டாவது பகுதியிலிருந்து **குறைந்தது ஒரு கேள்விக்கு** விடை எழுதவும்.
  முதல் **அல்லது** இரண்டாவது பகுதியிலிருந்து **மற்றொரு கேள்விக்கு** விடை எழுதவும்.
- விடை எழுதுவதற்கான புத்தகத்தின் முதல் பக்கத்திலுள்ள கட்டளைகளைப் பின்பற்றவும். கீழே **தமிழிலும்** கட்டளைகள் கொடுக்கப்பட்டுள்ளன. கூடுதல் விடைத் தாள்கள் தேவைப்பட்டால், தேர்வு அதிகாரியிடம், தொடர்ச்சிக்கான புத்தகத்தைக் கேட்கவும்.
- அகராதிகள் **அனுமதிக்கப்படமாட்டாது**.
- தேர்வு அறைக்குள் எந்தப் பாடப் புத்தகத்தையும் எடுத்துச் **செல்லக்கூடாது**.

## தகவல்
- இந்தக் கேள்வித்தாளுக்கான மொத்த மதிப்பெண்கள் 75.
- ஒவ்வொரு கேள்விக்கும் 25 மதிப்பெண்கள்.

This document has **8** pages. Blank pages are indicated.


KI 187449/1
© UCLES 2020



https://xtremepape.rs/

## விடைகள் எழுதும் புத்தகத்தில் செய்ய வேண்டியவை

விடைகள் எழுதும் புத்தகத்தின் முன் பக்கத்தில் எல்லாப் பெட்டிகளிலும் எழுதவும்.
கருநீலம் அல்லது கருப்புப் பேனாவால் எழுதவும். எந்த பார்க்கோட்டிலும் எழுதவேண்டாம்.
விடைகளை விடைகள் எழுதும் புத்தகத்தில் எழுதவும். பேப்பரின் இரண்டு பக்கமும் எழுதவும். ஒவ்வொரு கேள்வியின் விடைகளுக்கும் இடையில் இரண்டு இடங்கள் விடவும்.
நீ விடை அளிக்கும் கேள்வியின் நம்பரை முதல் மார்ஜினில் எழுதவும்.




நீ எழுதும் கேள்வி பகுதிகளாக இருந்தால் உதாரணமாக 1a, கேள்வியின் பகுதியை இரண்டாவது மார்ஜினில் எழுதவும். இரண்டாவது விடை எழுதும் புத்தகம் வாங்கி விடை எழுதி இருந்தால் அதையும் முதல் புத்தகத்துடன் சேர்த்து வைக்கவும்.



https://xtremepape.rs/

BLANK PAGE



https://xtremepape.rs/

ஏதாவது **மூன்று** கேள்விகளுக்கு, வேறு வேறு பாடப் பகுதிகளிலிருந்து கேள்விகள் எடுத்து விடைகளை எழுதவும். முதல் பகுதியில் இருந்து ஒரு கேள்வியும், இரண்டாவது பகுதியில் இருந்து ஒரு கேள்வியும் பகுதி ஒன்று அல்லது இரண்டில் இருந்து மூன்றாவது கேள்வியும் எடுத்து விடைகள் எழுதவும்.

**பகுதி 1**

**1 பகுதி (அ) அல்லது பகுதி (ஆ) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு கட்டுரை எழுதவும்.**

**(a)** <u>புறநானூறு</u>

மைம்மீன் புகையினும், தூமம் தோன்றினும்,
தென் திசை மருங்கின் வெள்ளி ஓடினும்,
வயலகம் நிறைய, புதல் பூ மலர,
மனைத்தலை மகவை ஈன்ற அமர்க் கண்
ஆமா நெடுநிரை நன் புல் ஆர,
கோஒல் செம்மையின் சான்றோர் பல்கி,
பெயல் பிழைப்பு அறியாப் புன்புலத்ததுவே -
பிள்ளை வெருகின் முள் எயிறு புரையப்
பாசிலை முல்லை முகைக்கும்
ஆய்தொடி அரிவையர் தந்தை நாடே
--புறநானூறு, பாடல், 117

**(i)** மேற்கூறிய புறநானூற்றுப் பாடலில் ஆமா, அரிவையர் ஆகிய சொற்களின் பொருள் என்ன?

**(ii)** கபிலர் பாடிய இப்பாட்டில், பாரியின் நாட்டைப்பற்றி என்ன சொல்கிறார்? [25]

**அல்லது**

**(b) சிலப்பதிகாரம், இளங்கோ அடிகள்**

வழக்குரை காதையில் கண்ணகியின் தோற்றம் பற்றியும், அவளது நாட்டின் பெருமை பற்றியும் இளங்கோ அடிகள் எப்படி வருணிக்கிறார்? ஏன்? எடுத்துக் காட்டுகளுடன் விடை தரவும். [25]



https://xtremepape.rs/

**2 திருக்குறள், திருவள்ளுவர்**

**பகுதி (அ) அல்லது பகுதி (ஆ) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு கட்டுரை எழுதவும்.**

**(a)** அவாஎன்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்

வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
யாண்டும் அஃதொப்பது இல்

தூஉய்மை என்பது அவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும்

அற்றவர் என்பார் அவாஅற்றார் மற்றையார்
அற்றாக அற்றது இலர்

அவா அறுத்தல் என்னும் அதிகாரத்தில் மேற்கூறிய குறள்களிலும் ஏனைய ஐந்து குறள்களிலும் ஆசைகொள்ளாது இருப்பதன் நன்மைகளை வள்ளுவர் எப்படி வலியுறுத்துகிறார்? [25]

**அல்லது**

**(b)** வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை - என்று கூறும் வள்ளுவர் ஈகை பற்றிய அதிகாரத்தில் வேறு என்ன சொல்கிறார்? [25]



https://xtremepape.rs/

3 தேவாரம் - அப்பர்

**பகுதி (அ) அல்லது பகுதி (ஆ) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு கட்டுரை எழுதவும்.**

**(a)** சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

சொற்றுணை வேதியன் என்று துவங்கும் நமச்சிவாயப் பதிகத்தினை திருநாவுக்கரசர் பாடியதன் சூழ்நிலை என்ன? அப்பதிகத்தில் அவர் என்ன சொல்கிறார்? [25]

**அல்லது**

**(b)** நமச்சிவாய என்ற ஐந்தெழுத்தின் பெருமையை அப்பர் என்னும் திருநாவுக்கரசர் எப்படியெல்லாம் பாடிப் பரவுகிறார்? நமச்சிவாய பதிகத்தினைக் கொண்டு விடை தரவும். [25]

© UCLES 2020


https://xtremepape.rs/

**பகுதி 2**

**4 இக்காலக் கவிதைகள்**

**பகுதி (அ) அல்லது பகுதி (ஆ) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு கட்டுரை எழுதவும்.**

**(a) பாரதியார்**
கண்ணனைச் சேவகனாய்க் காணும் பாரதி சேவகன் சொன்னது என்ன, செய்தது என்ன என்று எப்படி வருணிக்கிறார்? [25]

**அல்லது**

**(b) பாரதிதாசன்**
இயற்கையைப் பாடுவதில் பாரதிதாசன் வல்லவர் என்பதை அவரது காடு, கானல் கவிதைகளைக் கொண்டு விளக்குக. [25]

**5 நாவல், பால்மரக் காட்டினிலே, அகிலன்**

**பகுதி (அ) அல்லது பகுதி (ஆ) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு கட்டுரை எழுதவும்.**

**(a)** 'பால்மரக் காட்டினிலே' என்னும் நாவலில் வரும் பெண் கதாபாத்திரங்கள் உரிமைகளுக்காகப் போராடினார்களா, இல்லையா? உன் பதிலுக்கு சான்றுகள் தருக. [25]

**அல்லது**

**(b)** மலேசியாவில் ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு பாலன் எவ்வாறு உதவினார்? அதன் விளைவுகள் என்ன? [25]

**6 நவீன தமிழ்ச் சிறுகதைகள்**

**பகுதி (அ) அல்லது பகுதி (ஆ) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு கட்டுரை எழுதவும்.**

**(a)** 'அப்பாவிடம் என்ன சொல்வது?' கதையில் அசோக மித்திரனின் நடை உங்களுக்குப் பிடித்திருக்கிறதா? உங்கள் பதிலை எடுத்துக்காட்டுகளுடன் தருக. [25]

**அல்லது**

**(b)** 'மரங்களின் கதை' யில், ரயில் பயணத்தின்போது மரங்கள் பற்றி பாவண்ணன் அறிந்தது என்ன? விளக்கமாக விடை தரவும். [25]



https://xtremepape.rs/

**BLANK PAGE**

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

To avoid the issue of disclosure of answer-related information to candidates, all copyright acknowledgements are reproduced online in the Cambridge Assessment International Education Copyright Acknowledgements Booklet. This is produced for each series of examinations and is freely available to download at www.cambridgeinternational.org after the live examination series.

Cambridge Assessment International Education is part of the Cambridge Assessment Group. Cambridge Assessment is the brand name of the University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which itself is a department of the University of Cambridge.



https://xtremepape.rs/